RTROP No.209/2022 – 02.07.2025

RW1 – அறிவுடைநம்பி

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு கோருநர் தரப்பில் குறுக்கு விசாரணை

இந்த மனுவில் எதிர்மனுதாரர் தனி மாவட்ட வருவாய் அலுவலர் என்றால் சரி. கோருநரின் கையக்கப்படுத்தப்பட்ட நிலம் ஓமலூர்–பரமத்தி வேலூர் நெடுஞ்சாலையில் உள்ளது என்றால் சரி. தனி மாவட்ட வருவாய் அலுவலர் நில ஆர்ஜிதம் சம்மந்தமாக அரசால் நியமிக்கப்பட்டவர் என்றால் சரி.

நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்ட பிறகு நிலத்தை யாரிடம் ஒப்படைத்தோம் என்றால் நெடுஞ்சாலை துறையிடம் ஒப்படைக்கப்பட்டது. நெடுஞ்சாலை விரிவு படுத்தும் திட்டம் சென்னை கன்னியாகுமரி தொழில் தட திட்டப்பணியில் வருகிறது என்றால் சரி. அந்த சென்னை கன்னியாகுமரி திட்டப்பணியில் நான் பணி செய்தேனா என்றால் 05.10.2024 முதல் பணியாற்றி வருகிறேன். அதற்கு முன்பிருந்த திட்டபணிகள் குறித்து எனக்கு தெரியாது என்றால் நேரடியாக தெரியாது, ஆவணங்களின் அடிப்படையில் தெரியும். இந்த மனு சம்மந்தமான கோப்புகளை நான் தயாரிக்கவில்லை என்றால் சரிதான். இந்த திட்டப்பணிகளில் ஓய்வு பெற்ற வட்டாட்சியர்கள் பணி அமர்த்தப்பட்டார்களா என்றால் பணி

அமர்த்தப்பட்டார்கள். அதுபோல ஓய்வு பெற்ற நில அளவையர்கள் பணி அமர்த்தப்பட்டார்கள் என்றால் சரி. ஆனால் அவுட் சோர்சாக பணி அமர்த்தப்பட்டார்கள். ஓய்வு பெற்ற வட்டாட்சியரோ, நில அளவையரோ வயது முதிர்வு காரணமாக நில மதிப்பு குறித்து சரியான தரவுகளை தர முடியாது என்றால் சரியல்ல. அவர்கள் அனுபவம் பெற்றவர்கள். நில ஆர்ஜிதம் குறித்து எப்போது அறிவிப்பு வெளியிடப்பட்டது என்றால் 14.01.2020ல் வெளியிடப்பட்டது. அந்த அறிவிப்பை திருத்தம் செய்து மீண்டும் 25.07.2020 வெளியிடப்பட்டது என்றால் சரியல்ல, 10.03.2020ல் வெளியிடப்பட்டது.

ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலத்தில் எந்த தேதியில் அளந்து அத்து காட்டப்பட்டது என்றால் 27.01.2020 அன்று செய்யப்பட்டது. அறிவிப்பு செய்வதற்கு முன்பாகவே அத்து காண்பிக்கப்பட்டதா என்றால் இல்லை. திருத்தம் செய்த அறிவிப்பை 25.7.2020ம் தேதிவெளியிட்டுவிட்டு அதற்கு முன்பாகவே 27.1.2020ல் அளந்து அத்து காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் முதல் அறிவிப்பு வெளியிட்ட பின்னர் அளந்து அத்து காண்பிக்கப்பட்டுள்ளது. தீர்வம் எந்த தேதியில் வழங்கப்பட்டது என்றால் 28.06.2021ல் வழங்கப்பட்டது.

இழப்பீடு எந்த தேதியில் வழங்கப்பட்டது என்றால் 28.6.2021லேயே வழங்கப்பட்டுவிட்டது. ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலத்திற்கு எதிரே நெடுஞ்சாலையில் புளிய மரங்கள் இருந்ததா

என்றால் அது குறித்த விவரங்கள் கோப்பில் இல்லை. நெடுஞ்சாலை நெடுகிலும் புளிய மரங்கள் இருந்தது என்றும் அதை மறைத்து நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சாலை அமைக்கும் பணி எப்போது ஆரம்பிக்கப்பட்டது என்றால் தீர்வம் பிறப்பிக்கப்பட்ட உடன் நெடுஞ்சாலை துறையிடம் 28.6.2021ல் ஒப்படைக்கப்பட்டு வேலை ஆரம்பிக்கப்பட்டடது.

ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலத்தில் டிச்சி அமைப்பதற்காக பள்ளம் தோண்டப்பட்டதா என்றால் நெடுஞ்சாலைத்துறையிடம் நிலத்தை ஒப்படைத்த பிறகு அது குறித்து எங்கள் கண்காணிப்பு இல்லை. சாலை சீரமைக்கும் பணி இன்றைய தேதியில் முடிவடைந்துவிட்டதா இல்லையா என்றால் பிரதான வேலைகள் முடிந்துவிட்டது, ஆங்காங்கே சிறு சிறு பணிகள் நடைபெற்று வருகிறது.

கடந்த 5 ஆண்டுகளாக டிச்சி அமைத்ததாலும், மரங்கள் வெட்டிய போது சிரமம் ஏற்பட்டதாலும், ரோடு போடும் பணி 5 ஆண்டுகளாக முடியாத நிலையில் கோருநருக்கு வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

கோருநருக்கு வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டால் இழப்பீடு வழங்கப்படும் என தொழில் தட திட்ட கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியும். ஆனால் அது குறித்து கோரிக்கை இல்லை. கோருநருக்கு வாழ்வாதாரம்

பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. கோருநருக்கு வாழ்வாதாரத்திற்காக இழப்பீடு கொடுக்கப்பட்டுள்ளதா என்றால் இந்த கோருநருக்கு வாழ்வாதாரம் பாதிக்கப்படவில்லை என்பதால் இழப்பீடு கொடுக்கப்படவில்லை. அட்டவணை 1ஈ—ல் விவசாய நிலத்தால் வாழ்வாதாரம் இழந்தவர்களுக்கு இழப்பீடு கொடுக்க வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி. கோருநருக்கு வாழ்வாதாரம் பாதிக்கப்படவில்லை என்பதால் வாழ்வாதாரத்திற்கான இழப்பீடு கொடுக்கப்படவில்லை.

கடந்த 5 ஆண்டுகளாக சாலை பணி நடைபெற்று வருவதால் கோருநருக்கு வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. கோருநருக்கு எத்தனை சர்வே எண்களில் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது என்றால் 3 சர்வே எண்களில் செய்யப்பட்டுள்ளது. ஒரு சர்வே எண் குடியிருப்பு பகுதி, 2 சர்வே எண்கள் விவசாய நிலம் ஆகும்.

ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலத்திற்கு அருகில் உள்ள சர்வே எண்.468/2B1 நிலத்திற்கு அரசு வழிகாட்டி மதிப்பு சதுர மீட்டர் ரூ.1615/— நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்றும் அதை நாங்கள் கருத்தில் கொள்ளாமல் விலை நிர்ணயம் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. ஆர்ஜிதம் செய்யப்பட்ட பகுதி குடியிருப்பு நிறைந்த பகுதி என்றால் சரியல்ல. ஆர்ஜிதம் செய்த நிலம் பேருந்து நிறுத்தம் அருகே

உள்ளது என்றால் சரியல்ல. சந்தை மதிப்பு நிர்ணயம் செய்யும்போது மேற்கூறியவற்றை கவனிக்க தவறி விட்டோம் என்றால் சரியல்ல.

2020ம் ஆண்டிற்கு முன்பு 2017 முதல் 2020 வரையிலான விலை பட்டியலை கொண்டு நிர்ணயம் செய்துள்ளோம் என்றால் சரி. 2020 ஆண்டிற்கான விலை பட்டியலை கொண்டு இழப்பீடு நிர்ணயம் செய்யாமல் 2017 முதல் 2020 வரையான விலை மதிப்பை கொண்டு விலை நிர்ணயம் செய்தது சட்டத்திற்கு புறம்பானது என்றால் சரியல்ல.

15.01.2017 முதல் 14.01.2020 வரையான விற்பனை புள்ளிகள் சேகரிப்பட்டு நில மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. 2020ம் ஆண்டு நிலம் ஆர்ஜிதம் செய்துவிட்டு 2017 முதல் 2020 வரையிலான அரசு வழிகாட்டி மதிப்பினை வைத்து இழப்பீடு வழங்கியது சட்டத்திற்கு புறம்பானது என்றால் சரியல்ல. அரசு வழிகாட்டுதல் படி விலை நிர்ணயம் செய்யப்பட்டது. எனது எதிருரையில் நான் கூறி உள்ள சங்கதிகள் உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல. கோருநருக்கு உரிய இழப்பீடு கொடுக்கப்பட வேண்டும் என்றால் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/- S.Sumathy,
Principal District Judge, Salem.